# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය,මහලේකම් කාර්යාලය, තැ.පෙ.1559, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், தபெ. 1559, கொழும்பு 01, இலங்கை
Ministry of Finance & Planning, The Secretariat, P.O.Box: 1559, Colombo 01. Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம்; / Director General | 0094112484729<br>dgto@tod.treasury.gov.lk | ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 0094 112 484970 | පොදු / பொது / General | 0094 112 484500<br>0094 112 484600 |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. | TO/DCM/CLOCB/2014 | ඔබේ අංකය / உமது இல / Your No. | | දිනය / திகதி / Date | 23 -11-2015 |

**திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருப இல : 06/2015**

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் மாவட்டச்செயலாளர்கள்.

**<u>2015 ஆம் ஆண்டிற்கான காசேட்டினை மூடுதலும் கட்டுநிதிக் கணக்குகளை தீர்வு செய்தலும்</u>**

2015 ஆம் ஆண்டிற்கான காசேட்டினை மூடும் பொழுதும், கட்டுநிதிக் கணக்குகளை தீர்வு செய்தலின்பொழுதும் கீழ்வரும் அறிவுறுத்தல்களுடன் கண்டிப்பாக இணங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01. <u>2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் காசேட்டினை மூடுதல்</u>

2015 ஆம் ஆண்டிற்கான காசேடு 2015 டிசம்பர் 31 ஆம் திகதியின் முடிவில் பின்வரும் முறையில் மூடப்படுதல் வேண்டும்.

தங்களது அலுவலகங்களில் மற்றும் உப அலுவலகங்களில் காசேட்டினை மூடுவதற்கு அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் மாவட்டச்செயலாளர்கள் பெயரில் பிரதிநிதித்துவ அதிகாரத்தை ஒரு பொறுப்புள்ள பதவி நிலை அலுவலருக்கு அளித்தல் மற்றும் பிரதிநிதித்துவ அதிகாரத்திற்கான ஒரு பிரதியினை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அளித்தல் வேண்டும். 2015 ஆம் ஆண்டிற்கான நிதிப் பரிவர்த்தனைகள் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் முடிவுறுத்தப்பட்டிருப்பதுடன் அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டிற்கான எவ்வித நிதிப் பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ள முடியாது. அலுவலகங்களில் எங்கே காசேடு CIGAS திட்டத்துடன் இணைத்து பாவிக்கப்படுகின்றதோ, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் 2015 ஆம் ஆண்டிற்கான காசேட்டினை மூடுவதுடன், 2015 ஆம் ஆண்டு தொடர்பில் காசேட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பின்னரான நிதி பரிவர்த்தனைகளின் பதிவுகளை தடுப்பதற்காக ஒவ்வொரு காசுப்புத்தகத்திலும் கடைசியாக பதியப்பட்ட பதிவின் கீழ் சிவப்பு கோடு வரையப்பட்டிருப்பதுடன் அவரது பெயர், கையொப்பம், பதவி, திகதி மற்றும் நேரத்தை உள்ளடக்கிய குறிப்பை இடல் வேண்டும்.


| Additional Director General (Foreign Aid , Public Debt, Admin & Finance ) | Additional Director General (Consolidated Fund Mgt, Revenue & Reforms.) | Director (Cash Management) | Director (Consolidated Fund Mgt) | Director (Revenue) | Director (Foreign Aid Mgt) | Director (Debt Mgt) |
|---|---|---|---|---|---|---|
| Tel : 0094 112 484738<br>Fax : 0094 112 320042 | Tel : 0094 112 484748<br>Fax: 0094 112 484970 | Tel: 0094 112484901<br>Fax: 0094 112 484970 | Tel: 0094 112 484994<br>Fax: 0094 112 484970 | Tel: 0094 112484638<br>Fax: 0094 112 484970 | Tel: 0094 112484751<br>Fax: 0094 112320042 | Tel: 0094 112484749<br>Fax: 0094 112320042 |

**02.** <u>வருட இறுதியில் பொது திறைசேரிக்கு காசேட்டு மீதியினை தீர்வை செய்வதற்காக அனுப்புதல் (கட்டுநிதி கணக்கு இலக்கம்: 7002)</u>

**2.1** உப அலுவலகங்கள் இல்லாத அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் , 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலான காசேட்டு மீதியினை உறுதிப்படுத்துவதற்கான இல: TOD/IMP/06 என்ற படிவத்தை பூர்த்தி செய்வதுடன் அதை 2016 ஜனவரி 1 ஆம் திகதியில் அந்தந்த வங்கிக் கிளைக்கு சமர்பிக்கவும். TOD/IMP/06 ஆம் இலக்க படிவத்தின் பிரதியுடன் வங்கி வரவு அறிவித்தல் படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் இணைக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**2.2** உப அலுவலகங்களுள்ள அமைச்சுக்கள் மற்றம் திணைக்களங்கள், 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலான காசேட்டு மீதியினை உறுதிப்படுத்துவதற்கான இல: TOD/IMP/06 என்ற படிவத்தை பூர்த்தி செய்வதுடன் அதை 2016 ஜனவரி 4 ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ அந்தந்த வங்கிக்கிளைக்கு சமர்பிக்கப்படுதல் வேண்டும். TOD/IMP/06 என்ற படிவத்தின் பிரதியுடன் வங்கி வரவு அறிவித்தல் படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**2.3** 2016 ஜனவரி 1 ஆம் திகதியில் கட்டுநிதி மீதிகளை பொது திறைசேரிக்கு அனுப்புவதற்காக , உப அலுவலகங்களுக்கும் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்ட உப கட்டுநிதிகளின் தீர்வையை வசதிப்படுத்துவதற்கு முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலான காசு மீதிகளை உப அலுவலகங்களிடமிருந்து திரட்டும்போது 2.1 இல் கூறப்பட்டதற்கு ஒப்பான இலகுவான ஒரு முறையை மேற்கொள்வதுடன், உங்களது வங்கியுடன் நீங்கள் கலந்துரையாடலையும் மேற்கொள்ள வேண்டும்.

**2.4** எந்தவொரு அமைச்சோ அல்லது திணைக்களமோ கட்டுநிதி மீதியின் எப்பகுதியையாவது 2016 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப கட்டுநிதியினை அமைச்சுக்களுக்கோ அல்லது திணைக்களங்களுக்கோ விடுவிக்கப்படும் முதல் வேலை நாள் வரை வைத்திருத்தல் கூடாது. காசுப்புத்தக மீதியில் எவ்வித காசு மீதியும் இல்லாவிடினும் கூட "இல்லை" என்ற அறிக்கையினை 2.1 மற்றும் 2.2 அறிவுறுத்தலுக்கமைவாக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**2.5** 2016 ஆம் ஆண்டிலிருந்து பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்ட முறைமை அமுல்படுத்தப்படுவதன் காரணமாக , நி.பி.373 இன் பிரகாரம் அனைத்து கட்டுநிதி முற்பண கணக்கினையும் ( நகரும் முற்பணமாக மூலதன திட்டங்களின் மீது வழங்கப்பட்ட கட்டுநிதி முற்பணங்கள் உள்ளடங்கலாக ) தீர்வு செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை 31.12.2015 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

**2.6** திறைசேரிக்கு தரவுகளை சமர்பிக்கும் முன்னதான 31.12.2015 இலான காசேட்டை மூடியதன் பின்னரான விடயங்கள் உங்கள் மேலதிக கவனத்திற்காக 19.02.2015 ஆம் திகதி பாதீட்டு சுற்று நிருப இலக்கம் 01/2015 இல் உள்ளன. மாதிரி இலக்கம் TOD/IMP/06 என்ற மாதிரிப்படிவத்தை இத் திணைக்களத்திற்கு 2014 இல் இருந்தான கட்டுநிதி கணக்குகளின் தொடர்ச்சி மீதான காசு மீதிகளின் தீர்வை, 2015 ஆம் அண்டு காலப்பகுதியில் மூடப்படும் கட்டுநிதி கணக்குகள் மீதான காசு மீதி தீர்வைகள் மற்றும் மேலே தரப்பட்ட சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரமான 2015 இல்

திறக்கப்பட்ட புதிய கட்டுநிதி கணக்குகள் மீதான காசு மீதி தீர்வைகள் ( 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ) ஆகிய விடயங்களை தனியாகக் காட்டி அனுப்பி வைத்தல் வேண்டும்.

அரச கணக்குகள் திணைக்களத்தால் இதுவரை வழங்கப்பட்ட திறைசேரி அச்சுப்பிரதியில் குறிப்பிட்டுள்ளவாறு உங்களது கட்டுநிதி கணக்கு மீதிகளை உங்களது ஏடுகளுடன் சரிசெய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், மேலே குறிப்பிடப்பட்ட மீள் இணக்க செயற்பாட்டில் அடையாளம் காணப்பட்ட சிக்கலான பிரச்சினைகளை 2015 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் காத்திராமல் இத் திணைக்களத்தின் திரட்டிய நிதி முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து தேவையான உதவியினைப் பெற்று தீர்வினை காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**2.7** திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச்செயலகங்களுக்கான 2016 ஆம் ஆண்டிற்கான ஆரம்பக் கட்டுநிதியை விடுவிக்கும்பொழுது மேற்கூறப்பட்ட பந்தி 2.1, 2.2 மற்றும் 2.3 இன் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதானது கவனத்திற் கொள்ளப்படும்.

**3.** <u>மீள்நிரப்பப்பட்ட வெளிநாட்டு உதவி கட்டுநிதி கணக்கு இலக்கம்: 7003 இன் கீழ் கட்டுநிதி தீர்வு செய்தல்</u>

**3.1** நிகழ்ச்சித்திட்ட அலுவலகங்கள் படிவ இலக்கம்: TOD/IMP/07 இனை பூர்த்தி செய்வதுடன் , 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலான காசேட்டு மீதியை உறுதிப்படுத்தி, 2016 ஜனவரி 1 ஆம் திகதியில் மீள்நிரப்பப்பட்ட வெளிநாட்டு உதவி கட்டுநிதி குறியீடு 7003/00/ /15 இன் கீழ் பெறப்பட்ட கட்டுநிதி தீர்வையை அந்தந்த வங்கிக்கிளைக்கு சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட படிவ இலக்கம்: TOD/IMP/07 இன் பிரதிகளுடன் வங்கி வரவு அறிவித்தலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு, தொடர்புடைய அமைச்சுக்கான பிரதியுடன் உடனடியாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**3.2** மீள்நிரப்பப்பட்ட வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டுக்கள் தவிர்ந்த, மீள் இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்படாத (TOD/IMP/07(i)) கட்டுநிதி குறியீடு 7002 இன் கீழ் ஏனைய பற்றுச்சீட்டுக்கள் கணக்கிடப்பட வேண்டும்.

**4.** முன்னைய வருடங்கள் தொடர்பான தீர்வை செய்யப்படாத மீதிகள் போன்ற அல்லது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்படாத தொடர்புபட்ட அறிக்கைகள் மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்படும் திகதிகள் என்பவற்றில் மேலே தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்காதவர்களுக்கு கட்டுநிதி விடுவிப்பானது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் ஏற்படலாம்.

**5.**மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமிடத்து பின்வரும் அலுவலர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| அலுவலரது பெயரும் பதவியும் | பிரிவு | தொடர்பு இலக்கம் மற்றும் மின் அஞ்சல் |
|---|---|---|
| பணிப்பாளர் | திரட்டிய நிதி முகாமைத்துவம் | 011-2484994<br>dilipl@tod.treasury.gov.lk |
| பணிப்பாளர் | வெளிநாட்டு உதவி முகாமைத்துவம் | 011-2484751<br>sarathk@tod.treasury.gov.lk |
| பணிப்பாளர் | பாதீட்டு குழு | 011-2484743<br>sumedhaw@tod.treasury.gov.lk |
| உதவி பணிப்பாளர் | பாதீட்டு குழு 1 | 011-2484745<br>himalic@tod.treasury.gov.lk |
| உதவி பணிப்பாளர் | பாதீட்டு குழு 2 | 011-2484739/011-2484971<br>sajeewanid@tod.treasury.gov.lk |
| உதவி பணிப்பாளர் | பாதீட்டு குழு 3 | 011-2484742<br>wasanthic@tod.treasury.gov.lk |
| உதவி பணிப்பாளர் | பாதீட்டு குழு 4 | 011-2484744<br>madushau@tod.treasury.gov.lk |

ஒப்பம் : எம்.எஸ்.டி.றணசிரி

பணிப்பாளர் நாயகம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்
2. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
3. நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர்கள் - சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியின் கருத்துப்படி நடவடிக்கை எடுக்கவும்
4. பொது முகாமையாளர்- இலங்கை வங்கி
5. பொது முகாமையாளர்- மக்கள் வங்கி

} 2.1, 2.2 மற்றும் 3.1 ஆம் பந்தியில்குறிப்பிடப்பட்டவாறான பண அனுப்புதல்கள் தொடர்புடனான வழமையான வசதிகள் வழங்குவதில் யாருக்கு ஒத்துழைப்பு தேவைப்படுகின்றதோ.

படிவ இலக்கம் : TOD/IMP/06

எனது இலக்கம் :- ..........................

திகதி :- ......................................

முகாமையாளர்,
இலங்கை வங்கி / மக்கள் வங்கி.
.................. கிளை

கனம் ஐயா / அம்மணி,

**20… 12.31இல் காசுப் புத்தகத்தை மூடி**
**காசுப் புத்தகத்தில் உள்ள மேலதிக தொகையினை**
**திறைசேரிக்கு திருப்பியனுப்புதல்**
**நடைமுறைக் கணக்கு இலக்கம்...............**

அமைச்சு /திணைக்களம் /மாவட்டச் செயலகம் :- ....................................................

கட்டுநிதிக் கணக்கு இலக்கம்:- 7002/0/0/…../….

20…..12.31 அன்று இந்த அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டச் செயலாளர் அலுவலகத்தின் காசுப் புத்தகத்திற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா .....................வினை *இலங்கை வங்கி தெப்ரோபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு / *மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,

| | |
|---|---|
| கணக்காளர்/பிரதிப் பணிப்பாளர் (நிதி)<br>அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக | பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி)<br>அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக |
| திகதி :- .................................. | திகதி :- ........................................ |

பிரதி: பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
இணைந்த நிதி முகாமைத்தவப் பிரிவு
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

} தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் :- 7002/0/0/…../… க்கு செலவு வைக்கவும்.

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.

படிவ இலக்கம் : TOD/IMP/07

எனது இலக்கம் :- ..........................

திகதி :- ......................................

முகாமையாளர்,
இலங்கை வங்கி/மக்கள் வங்கி.
.................. கிளை

கனம் ஐயா / அம்மணி,

**20.... .12.31 அன்று மீளளிக்கத்தக்க வெளிநாட்டுதவிக்கான காசுப் புத்தகத்தினை மூடி மீதியினை திறைசேரிக்கு திருப்பியனுப்புதல் நடைமுறைக் கணக்கு இலக்கம்............**

அமைச்சு/ திணைக்களம் / மாவட்டச் செயலகம் :- ....................................................
கருத்திட்டம்: .................................

கட்டுநிதிக் கணக்கு இலக்கம் - 7003/0/0/...../.....

20.....12.31 அன்று இந்த அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டச் செயலாளர் அலுவலகத்தின் காசுப்புத்தகத்திற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா .....................வினை *இலங்கை வங்கி தெப்ரொபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு/*மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
நன்றியுள்ள,

நிதி முகாமையாளர்/கருத்திட்ட கணக்காளர்
திட்டப் பணிப்பாளருக்குப் பதிலாக

திகதி :- ................................

திட்டப் பணிப்பாளர்
அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக

திகதி :- ..........................................

பிரதி: பணிப்பாளர் நாயகம்
கடன்சேவைகள் மற்றும் கணக்கீடுகள் பிரிவு
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

} தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் 7003/0/0/...../ க்கு செலவு வைக்கவும்.

**பிரதி:** அமைச்சின் செயலாளர் - தகவல்களுக்காக

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.

படிவ இலக்கம் : TOD/IMP/07(i)

**20.....-12-31 அன்று முடிவுற்ற வருடத்திற்கான கட்டுநிதி இணக்கக் கூற்று**
**மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவி**

1. அமைச்சு /திணைக்களம் :-

2. கட்டுநிதிக் கணக்கு இல :-

3. கருத்திட்டம் :-

| மாதம் | பெற்றுக் கொண்ட கட்டுநிதி | | | செலவினம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீவெஉ (1) | உநி (2) | மொத்தம் (1)+(2)=(3) | மீவெஉ (4) | உநி (5) | மொத்தம் (4)+(5)=(6) | மீவெஉ (1-4) | உநி (2-5) | மொத்தம் (3-6) |
| ஜனவரி | | | | | | | | | |
| பெப்ரவரி | | | | | | | | | |
| மார்ச்சு | | | | | | | | | |
| ஏப்பிரல் | | | | | | | | | |
| மே | | | | | | | | | |
| ஜூன் | | | | | | | | | |
| ஜூலை | | | | | | | | | |
| ஓகஸ்ட் | | | | | | | | | |
| செப்ரெம்பர் | | | | | | | | | |
| ஒக்ரோபர் | | | | | | | | | |
| நவம்பர் | | | | | | | | | |
| டிசம்பர் | | | | | | | | | |
| மொத்தம் | | | XX | | | XX | | | XXX |

வருட காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட மொத்தக் கட்டுநிதி (3) :- XXX

வருடத்திற்கான மொத்தச் செலவினம் (6) :- XXX

20….-12-31 இல் உள்ளவாறான மீதி :- XXX

தீர்க்கப்படாத முற்பணங்கள் (ஏதேனும் இருப்பின்)

| முற்பணத் திகதி:- | நிறுவனம்:- | காரணம்:- | தொகை - ரூபா. |
|---|---|---|---|
| ………………… | ………………. | ……………. | X |
| ………………… | ………………. | ……………. | X |
| | | | XX |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என்று சான்றுப்படுத்துகின்றேன்.

…………………………….. திகதி : ………………

நிதி முகாமையாளர் / கருத்திட்டக் கணக்காளர்